# சங்க இலக்கியம்

## கருத்தியல் வளம்



பதிப்பாசிரியர்
முனைவர் இரா. சந்திரசேகரன்

* 2003 *

நாம் வியக்கின்றோம். தன் மகனைப் போன்றே நாட்டையும் பாவித்தால் மகன் நாட்டுக்காகத் தன்னை ஈந்த செயல் அவளுக்குப் பெருமிதத்தை அளிக்கின்றது.' இவளைப் போன்ற மற்றுமொரு வீரப்பெண்மணியையும் இங்கு நாம் காணலாம்.

ஒரு தாயிடம் போர் புரிந்து வெற்றியோடு வீடு திரும்பிய மகனைப் பற்றி வினவுகின்றாள் ஔவை. இத்தகு மறுமொழியாக *வேந்தனின் சிறப்பான அன்பைப் பெற்ற என் மைந்தன் வெற்றியோடு திரும்பியதைவிட அவ்வேந்தன் இன்புற்றுக் கண்ணீர் மல்கும்படி நாட்டிற்காக நெஞ்சரத்தோடு தன்னை ஈதல் எனக்குப் பன்மடங்கு இன்பத்தைத தரும்* என்கிறாள்.

*வெள்ளை வெள்யாட்டுச் செச்சை போலத்*
*தன்னோ ரன்ன விளைய ரிருப்பப்*
*பலர்மீது நீட்டிய மண்டையென் சிறுவனை*
*கால்கழி கட்டிலிற் கிடப்பித்*
*தூவெள் ளறுவை போர்ப்பித் திலதே* (புறம் : 286)

என்பவை அக்கருத்தை நமக்கு உணர்த்துகின்றன. இது நம்பகத்தன்மை யற்றதானாலும் மக்களைப் பண்படுத்தும் கருவியாக இவை அமைகின்றன.

## முடிவுகள்

ஔவை படைத்த புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றிலிருந்து பெறப்படும் கடமை தவறா ஆட்சி, சான்றாண்மை, ஈகை, நாட்டுப்பற்று ஆகிய மனிதனுடைய அன்றாட வாழ்வின் அறங்களாகின்றன.

முறைசெய்து காக்கும் மன்னனே மக்களுக்கு இறை எனக் கொள்ளப்படுவான் என்பதை மக்களைக் காக்கும் கடமையாற்றுவோர் தங்கள் தாரக மந்திரமாக ஏற்றுச் செயல்படவேண்டும்.

அவன் காட்சிக்கு எளியனாகவும் இன்சொல் உடையவனாகவும் திகழ வேண்டும்.

தூதுப்பணி புரிவோர் சொல்வன்மையும் அறிவுக்கூர்மையும் உடையோராகத் திகழ வேண்டும்.

நாட்டுப்பற்று நம் உயிர்மூச்சு, நாட்டிலுள்ள ஒவ்வொரு உயிரும் இதனைச் சுவாசிக்க வேண்டும்.



# குறிஞ்சியில் வீசிய நெடுநல்வாடை

**இரா. விஜயன்**, எம்.ஏ., எம்.ஃபில்.,
*வி.என்.ஆர்.நகர், வடவள்ளி, கோவை.*

## முன்னுரை

நெடிய நல்வாடைக் காற்று அகத்தை வருடி, புறத்தே நாம் உடல் சிலிர்த்து, மெய்மறந்து அகமா, புறமா என இன்பச் சுவையிலே கண் மயங்கும் போதுதான் புரிகிறது இது புறப்பட்ட இடம் குறிஞ்சி என்று. குறிஞ்சியில் மலர்ந்து மனம் வீசிய மானுடத் தென்றலாம் கபிலரிடத்து தான் கொண்ட பேரவா தமது நெடுநல்வாடையிலும் வீச எண்ணி அத்தென்றலின் குளிர்ச்சியைத் தனது வாடையுடன் புணரவிட்டு புது மகவு பெற்ற நக்கீரர், தனது கவியான நெடுநல்வாடையை மட்டும் வையகம் எனத் துவக்காமல் கபிலரைப் போற்றும் பாங்கிலும் உலகத்தை எடுத்தாள்கிறார்.

*உலகம் திரிதரும் புலர் புகழ் நல்லிசை*
*வாய் மொழிக் கபிலன்* (அகம். 78)

நக்கீரர் விடுத்த வாடை குறிஞ்சியுடன் எவ்வகையில் கலந்து புதுச்சுவை தருகிறது என்பதை ஆய்வதே இவண் நோக்கமாகும்.

## கருப்பொருள்

தலைவியின் ஆற்றாமையை எடுத்துரைப்பதே முதன்மை எனினும், அதை வெளிப்படுத்த இருவரும் மேற்கொண்ட வழிகள் வேறு. ஆனால் சென்ற இடம் ஒன்றுதான்.

குறிஞ்சியில் தலைவியின் ஆற்றாமையை நற்றாயிடம் கொண்டு சென்று அதற்கான காரணங்களைப் பின்னோக்கு யுக்தியில் படைத்த கபிலரை முன் வைத்து வாடையில் தலைவிக்காக இப்புறமே வருந்துவதாய்ச் சொல்லி பின் இறுதியில் தலைவியின் ஆற்றாமையை வெளிப்படுத்துவார் நக்கீரர்.

குறிஞ்சியில் வெளிப்பட்ட மக்களின் பண்பாடு, சமுதாயநிலை வாடையிலும் வீசுவது வியப்பே.......!

## மாலைப் பொழுதின் வருகை

*ஆம்பல் ஆயிதழ்க் கூம்புவிட வளமனைப்*
*பூந்தொடி மகளிர் சுடர்தலைக் கொளுவி* (குறிஞ்சி. 223)

ஆம்பல் மலர்கள் மொட்டவிழ்ந்த உடன் மாலைப் பொழுது வந்ததை உணர்ந்த மகளிர் தம் இல்லங்களில் விளக்கேற்றினர் என அன்றைய மக்கள் நிலையை முன் நிறுத்திய கபிலரை முன்நிறுத்தி நக்கீரர் மாலைப் பொழுதின் அறிகுறியாய் பிச்சிப்பூ மலர்ந்தது, மகளிர் நெய்விளக்கேற்றி வழிபட்டனர் என்பதை,

*செவ்வி அரும்பின் பைங்கால் பித்திகத்து*
*அவ்விதழ் அவிழ்பதம் கமழப் பொழுது அறிந்து* (நெ.வா. 40)

என மொழிகிறார்.

மிகுதியான குளிரை அடக்கும் வழிதெரியாமல் தாம் அடங்கிய நிலையில் கோவலர்கள் நெருப்பிட்டுக் குளிர் காய்ந்தனர் என குறிஞ்சிக் குளிரை காட்டுகிறார் கபிலர்.

*விண்தோய் பணவை மிசை ஞெகிழி பொத்த*
*வான்மாமலை வாய்சூழ்பு.......* (குறிஞ்சி. 226)

குளிரின் பொருட்டு மிகுந்த வேதனை அடைந்த கோவலர்கள் ஒன்று கூடி நெருப்பிட்டு குளிர் காய்ந்ததை நம் உள்ளம் குளிர நக்கீரரும் வெளிப்படுத்துகிறார்.

*மெய்கொள் பெரும்பனி நலியப் பலருடன்*
*கைக்கொள் கொள்ளியர் கவுள்புடை..........* (நெடு. நல். 6)

## மக்கள் நிலை

கள் உண்பது என்பது அன்றைய சமுதாயத்தில் பழக்கமாக இருப்பினும் அதை எந்தப் புலவரும் ஆதரித்து எழுதியது இல்லை. கள் உண்ட மக்கள் எவ்வாறு தம்நிலை மறந்து மாக்கள் ஆகிறார்கள் என்பதை வெளியிட விரும்பிய கபிலர் தமது குறிஞ்சியில்.

*தேம்பிழி தேறல் மாந்தி மகிழ்சிறந்து*
*சேமம் மடிந்த பொழுதின் வாய்மரத்து...........* (குறிஞ்சி. 155)

கள் உண்டதால் ஒருவன் எவ்வாறு தன் கடமையை மறக்கிறான் என்று சுட்டிக்காட்டுகிறார்.



*வண்டுமூசு தேறல் மாந்தி மகிழ்சிறந்து*
*துவலைத் தண்துளி பேணார்.........* (நெடு. 33)

கள் உண்டதால் தமது ஊர்க்காவல் பணியைக் கூடச் செய்யாமல் தனது மீது மழை விழுவது கூடத் தெரியாமல் கள் உண்ட மயக்கத்தில் கால் தடுமாறிய கயவர்களைத் தமது பாடலிலும் காட்ட நக்கீரர் மறந்தாரில்லை.

கள் உண்பது எந்த அளவிற்குத் தாழ்வாக கருதப்பட்டதோ, தெய்வ வழிபாடு அந்த அளவிற்கு உயர்வாகக் கருதப்பட்டது.

*பரவியும் தொழுதும் விரவுமலர் தூவியும்*
*வேறுபலி உருவின் கடவுள் பேணி* (குறி. 5)

தலைவியின் துயர் நீங்க நற்றாய் பல்வேறு தெய்வங்களை வேண்டியதும், இப்பாடல் மூலம் குறிஞ்சி மக்களின் தெய்வ வழிபாட்டுச் சிறப்பை எடுத்துக்காட்டி கபிலரை வணங்கி, போரின்கண் சென்று தங்கியிருக்கும் தலைவனின் பிரிவால் தலைவி வாடி, மெலிவுற்று மயங்கி இருக்க, நற்றாய் கொற்றவையை வேண்டியதை *இன்னா அரும்படர் தீரவிரல் தந்து இன்னே முடிகதில் அம்ம (நெடு. 167)* என்று நக்கீரர் வாடையின் வசந்தமாய் வீச வைக்கிறார்.

## கற்பனை வளம்

*நெல் கொள் நெடுவெதிர்க்கு அனந்தயானை*
*முத்த ஆர் மருட்பின் இறங்குகை கடுப்பத்*
*துய்த்தலை வாங்கிய புனிறுதீர் பெரும்குரல்* (குறி. 35)

மூங்கிலை வளைக்க முயன்ற யானை தனது துதிக்கையை நெடுநேரம் மேலே உயர்த்தியிருந்ததால் ஏற்பட்ட வலியைக் குறைக்கத் தனது கொம்பிலேயே துதிக்கையை வைத்து இளைப்பாறியது, என குறிஞ்சி யானையின் வருத்தத்தை வருடிய கபிலரைக் கண்டு.

நெடுநேரம் பறக்காமல் அமர்ந்திருந்ததால் காலில் ஏற்பட்ட வலியைக் குறைக்க புறா தனது கால்களை மாற்றி மாற்றி நின்றது என புறாவின் புற வெளிப்பாட்டை வெளிப்படுத்தி நக்கீரர் தம் கவிச் சிறகை குறிஞ்சி நோக்கி விரிக்கிறார்.

*மனையுறை புறவின் செங்கால் சேவல்*
*இன்புறு பெடையோடு மன்று தேர்ந்து உண்ணாடல்*
*இரபும் பகலும் மயங்கிக் யைற்று*
*மதலைப் பள்ளி மாறுவன இருப்ப* (நெடு. 45)

காலங்கள் மறைந்தாலும் தமது படைப்புகள் மறையாதிருக்கப் புலவர்கள் ஏதேனும் ஒரு சிறப்பைத் தமது படைப்பு எனனும் மகுடத்தில் மாணிக்கமாய்ப் பதிக்க மறந்தாரில்லை. தமது குறிஞ்சியில் 99 வகை மலர்களை முன்நிறுத்தி தமது மெய்ஞானத்தை எடுத்தியம்புகிறார் கபிலர்.

*ஒண்செங்காந்தள், ஆம்பல் அனிச்சம்*
*தண்கயக் குவளை, குறிஞ்சி வெட்சி*
*செங்கோடு வேரிதேமா! மணிச்சிகை* (குறிஞ்சி. 6)

வாடையிலும் வசந்தமாய் தமது படைப்பில் என்றும் அழியா அற்புத அறிவியல் கருந்தை வெளியிட்டு தமது விஞ்ஞான ஆற்றலை மெய்ப்பிக்கிறார் நக்கீரர்.

*விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டில*
*இருகோல் குறிநிலை வழுக்காது குடக்கு ஏர்பு*
*ஒரு திறம் சாரா அரைநாள் யாமத்தும்*
*நூல் அறி புலவர் நுண்ணிதின் கயிறு இட்டு* (நெடு. 72)

அறிவியல் முறைப்படி இவர் அமைத்துக் கொடுத்த காலத்தூணில்தான் இன்றைய இலக்கிய உலகம் மாளிகை பல எழுப்பி உள்ளது என்பது கண்கூடு.

## முடிவுரை

வகைப்பாட்டில் குறிஞ்சியும் நெடுநல்வாடையும் அகம், புறம் என பிரிக்கப்பட்டிருப்பினும், இறுதியில் மட்டுமே வாடை புறம் என, ***வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகமொடு*** (நெடு. 176) வருடச் செய்கிறார் நக்கீரர்.

வாடையை மட்டும் படைத்து மக்களை வாட்டாமல் அது நல்வாடையாக வீச வேண்டும் என எண்ணியே நக்கீரர் குறிஞ்சியை நோக்கித் தமது வாடையை செலுத்தினாரா....? என எண்ணுமளவிற்கு குறிஞ்சியின் கற்பனை வளமும், கருத்துச் செறிவும், கருப்பொருள் தாக்கமும், நெடுநல்வாடையில் இல்லாமல் இல்லை. சங்க இலக்கிய வானில் ஒளி தரும் சந்திரனாய் கபிலர் நின்றிருக்க, சுடர் விடும் சூரியனாய் நக்கீரர் என்றும் நிலை பெற்றிருப்பார் என்பது மட்டும் திண்ணம்.



# புறநானூறு காட்டும் கல்வி

**இரா.விஜயசந்திரன்,** எம்.ஏ.,எம்ஃபில்.,பிஎச்.டி.,
*பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.*

சங்க காலத்தில் அகம் புறம் தொடர்பான கருத்துக்களையே அதிக அளவில் புலவர் பெருமக்கள் பாடியுள்ளனர். புறம் என்பது பெரும்பாலும் போர்க்கள வீரச் செயல்களையும், கொடை பற்றிய செயல்களையும் பற்றியே அமைந்துள்ளனவாயினும் கல்வி பற்றிய செய்திகளும் அழுத்தமாகக் காணப்படுகின்றன. எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் கருத்தியல் அழுத்தம் மிக முக்கியத்துவம் பெற்றதாக அமைந்துள்ளது. இத்தகைய கல்வி சங்க காலத்தில் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை அறிமுகம் செய்வது இக்கட்டுரையின் நோக்கம்.

## புறநானூறு காட்டும் கல்வி

புறநானூறு பாடல்களில் கல்வி பற்றிய சிந்தனைகள் பரவிக் கிடக்கின்றன் கல்வி பற்றிய தெளிவான பார்வை அப்புலவர்களுக்கு இருந்தது. கல்வி என்பது கற்பிக்கப்படுவது. சங்ககாலத்தில் ஒழுக்கத்தை, உயர்வை, உரிய வழியை, உயர்ந்த மனப்பான்மையை, அன்பை, பாசத்தை, பிறரை மதிக்கும் பண்பையும், பொதுவுடைமையையும், உயர்ந்த நோக்கங்களையும் அடையவேண்டிய வழியையும் கற்பித்தனர். இன்று நடைமுறைப்படுத்தும் கல்வி வெறும் படிப்பு மட்டுமே. கல்வி வேறு : படிப்பு வேறு ; உயர்ந்த ஒழுக்கங்கள் கற்பிக்கப்படுகின்ற கல்வியை எல்லாத் தமிழரும் பெற்றிருக்க வேண்டும் என்று பாரதிதாசன் குறிப்பிடுகின்றார். அதனால்தான், ***எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லையெனில் இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும். கல்வி கற்பதற்கு வறுமை தடைக்கல்லாக இருக்கக்கூடாது*** என்று வலியுறுத்துகின்றார்.

*கேடில் விழுச்செல்வம் கல்வி* என்றார் வள்ளுவர். மாசற்ற, கேடு விளைவிக்காத செல்வம் எதுவெனின் கல்வியை மட்டுமே வள்ளுவர் முன்னிறுத்துகின்றார். இப்படிப்பட்ட கல்விச் செல்வத்தைப் பெறவேண்டுமானால் பிச்சையெடுத்தாவது கல்வியைப் பெறுவது நன்றாகும் என்று அதிவீரராமப் பாண்டியன் குறிப்பிடுகின்றார். *கற்கை*